# செயலாற்றுகை அறிக்கை – 2015

## தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
## நிதி அமைச்சு

### தூர நோக்கு

அரசாங்க வளங்களின் வினைத்திறன் மிக்க ஒதுக்கீடு ஒன்றினூடாக சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்

### பணிக்கூற்று

அரச சேவைகளின் வினைத்திறன் கொண்ட நடவடிக்கை, அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கான வளங்களின் ஏற்பாடு மற்றும் விநியோகம் என்பவற்றை செய்வதற்கூடாக பொது நிதி முகாமைத்துவம் குறித்த சட்டவாக்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு உதவியளித்தல்

## தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

அ. தேசிய வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல்

03 வருட காலப்பகுதிக்கான நடுத்தரக் கால வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகத்தினைத் தயாரித்தல்.

- அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசிறை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு செலவின முகவராண்மைகள் மற்றும் தொடர்புடைய திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல்.

ஆ. அரசாங்க செலவின முகாமைத்துவம்

- வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடல்.
- அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக நிதி பயன்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒதுக்கீட்டு வரவு செலவுத் திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.
- செலவினங்களின் பயன்பாட்டுத் தன்மையினை உறுதிப் படுத்துவதற்காக செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- நிதியியல் போன்ற பௌதிக முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கான செலவினங்களை பகுப்பாய்வு செய்தல்.
- அரசாங்க கணக்குகள் மீதான குழுவில் (COPA) தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் பற்றிய அவதானிப்புக்களைத் தயாரித்தல்.
- தொழிற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படும் அனைத்து அரசாங்க முகவராண்மைகளுக்கும் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.
- சபைகள் மற்றும் குழுக்களில் பொதுத் திறைசேரி / தேசிய வரவு செலவுத் திட்டத்தினை பிரதிபலிக்கும் வகையில் அலுவலர்களின் பங்கு பற்றல்.
- திணைக்களத்தின் நிதி நிருவாகம்

இ. நியதிச் சட்ட சபைகளுடன் தொடர்பான செயற்பாடுகள் (வர்த்தகம் அல்லாத அரசாங்க நிறுவனங்கள்)

- திரட்டிய நிதியின் மூலம் ஒத்துழைப்பு வழங்கப்படும் நியதிச் சட்ட முகவர்களுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- பொது தொழில் முயற்சிகள் மீதான குழுவில் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- காசு விடுவிப்புகள் தொடர்பான பரிந்துரைகளை மேற்கொள்ளல்.

ஈ. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

- செலவிடும் முகவர்களுடன் கலந்துரையாடுவதன் பேரில் வர்த்தக, களஞ்சியங்களில் அரசாங்க அலுவலர்களுக்கானமுற்பணக் கணக்குகள் மீதான எல்லைகளை தீர்மானித்தலும் மீளாய்வு மீதான வேண்டுதல்களை வரையறுத்தலும்.
- முற்பணக் கணக்குகள் சார்ந்த விடயங்கள் பற்றிய பொதுக் கணக்குக் குழுக்கள் தொடர்பான கூட்டங்களில் திறைசேரி சார்பாக குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.
- தாபன பணிப்பாளர் நாயகத்துடன் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு.

# உள்ளடக்கம்


| அத்தியாய இல. | | விடயம் | பக்கம் |
|---|---|---|---|
| **01.** | | **மேன்நோக்கு** | **01** |
| **02.** | | **வரவு செலவுத்திட்ட மீளாய்வு மற்றும் செயற்படுத்துகை 2015** | **04** |
| | 2.1 | 2015 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம் | 04 |
| | 2.2 | எதிர்பாரா நிதியினைப் பயன்படுத்தல் | 05 |
| | 2.3 | 2015 வரவு செலவுத்திட்டச் செயலாற்றுகை | 05 |
| | 2.3.1 | 2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் | 05 |
| | 2.4 | 2015-2017 நடுத்தரக் கால செலவின வேலைச்சட்டகத்தில் 2015 வரவுசெலவுத்திட்ட துறைரீதியான துறைரீதியான நோக்கு | 08 |
| | 2.5 | 2015 வரவு செலவுத்திட்ட முகாமை | 08 |
| | 2.5.1 | மொத்த அரசாங்க செலவினம் | 08 |
| | 2.5.2. | அரசாங்க செலவின முகாமைத்துவம் | 08 |
| | 2.5.2.1 | நிதி மாற்றல் | 08 |
| | 2.5.2.2 | குறைநிரப்பு மதிப்பீடுகள் | 09 |
| | 2.5.2.3 | 2015 இல் திறைசேரி நானாவித நிலைமைகள் | 09 |
| | 2.5.3 | வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடுதல் | 10 |
| | 2.6 | முற்பணக் கணக்குகளின் கண்காணிப்பு | 10 |
| **03.** | | **2016 ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்** | **11** |
| | 3.1 | வரவு செலவுத்திட்ட தயாரிப்பு வழிகாட்டல் | 11 |
| **04.** | | **விசேட நடவடிக்கைகள்** | **11** |
| | 4.1 | இலாபமீட்டாத அரசாங்க தொழில் முயற்சிகளின் முகாமை | 11 |
| | 4.2 | அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் அவதானிப்புகள் | 12 |
| | 4.3 | வாகனக் கொள்வனவுகளுக்கான அங்கீகாரம் | 12 |
| | 4.3.1 | வாகனக் கொள்வனவுகளுக்கான வரவு செலவுத்திட்ட அங்கீகாரம் | 12 |
| | 4.3.2 | அரசாங்கத் துறைக்கான வாகனங்கள் கொள்வனவு | 13 |
| | 4.4 | சபைகளிலும் குழுக்களிலும் பதவியினரின் பங்குபற்றுதல் | 13 |
| **05.** | | **தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு** | **13** |
| | 5.1 | பதவியணி | 14 |
| | 5.2 | மனித வள அபிவிருத்தி | 15 |
| | 5.2.1 | வெளிநாட்டு பயிற்சி / கருத்தரங்குகள் / மாநாடுகள் | 15 |
| | 5.2.2 | உள்நாட்டுப் பயிற்சி | 16 |
| | 5.3 | தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் நிதி நிருவாகம் | 16 |
| | 5.3.1 | முற்பனக்கணக்கு செயற்பாடுகள் | 17 |
| | 5.3.2 | 2015 ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் வினாக்கள் | 18 |
| | 5.4 | வ.செ.தி திணைக்களத்தின் நிறுவனக்கட்டமைப்பு | 19 |

# 1. மேன்நோக்கு

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களமானது நிதி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படும் அதேவேளை வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான முகவராகவும் செயற்படுகின்றது. புதிய அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்களுக்கு வசதியளிக்கும் வழியில் தேசிய வரவு செலவுத்திட்டம் பூச்சிய அடிப்படையில் வரவு செலவுத்திட்டத்தினை தயாரிக்கும் செயன்முறையொன்றினை அறிமுகப்படுத்தும் வகையில் மீளமைக்கப்பட்டதுடன் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தினை உள்ளடக்கும் வகையில் நடைமுறை நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி அளிப்பு மற்றும் செயலாற்றுகை மட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் நியாயப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது. நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட முகவராண்மைகள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதன் மூலம் இச் செயன்முறை இடம்பெறுகின்றது. இத் திணைக்களத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் செயலாற்றுகை நிதி அமைச்சின் பொது நிதி முகாமைத்துவம் என்ற பரந்தளவிலான நோக்கெல்லையினை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பொதுவான நோக்கத்தினையும் நிறைவேற்றுகின்றது. 2015 ஆம் ஆண்டில் இத் திணைக்களம் வரவு செலவுத்திட்டம் - 2015 இனை செயற்படுத்துவதுடன் தொடர்பான பரந்தளவிலான செயற்பாடுகளை முன்னெடுத்த அதேவேளை கீழே அட்டவணை 1.1 இல் குறிப்பிடபட்டுள்ளவாறு 2016 - 2018 நடுத்தர கால செலவின வேலைச் சட்டகத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு பூச்சிய அடிப்படையில் வரவு செலவுத்திட்டத்தினை தயாரிக்கும் முகமாக 2016 இற்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட தயாரிப்புச் செயற்பாடுகளையும் முன்னெடுத்தது.

**அட்டவணை 1.1 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை சுருக்கம்**

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| 1. 2015 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தையும் செலவின முகாமையையும் செயற்படுத்துதல். | செலவின முகாமைத்துவம் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கும் வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தினை வெளியிடுதல். | அரசாங்க செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்தல். | இது தொடர்பாக 5/2015 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. |
| | எதிர்பாரா செலவினத்திற்கான மேலதிக நிதி ஒதுக்கீடு மற்றும் பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல். | நிதி ஏற்பாடு செய்தலும் எதிர்பாரா செலவினங்களை குறைத்தலும். | பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றினை சமர்ப்பிக்காது வெள்ளம், வரட்சி போன்ற எதிர்பாராத நிகழ்வுகளுக்கான மேலதிக நிதி ஒதுக்கீட்டுத் தேவை நிவர்த்தி செய்யப் பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறைக்குள் நிதி மீள் ஒதுக்கீட்டினை முகாமை செய்தல். |
| | நிதிப்பிரமாணக்குறிப்பு 66 மற்றும் 69 இன் கீழ் நிதி மாற்றல்களுக்கு அங்கீகாரம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்குள் செலவினத்தினைப் பேணுதல். | நிதி ஒழுங்கு விதி 1243 இற்கு அமைவாக விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதில் 220 விண்ணப்பங்கள் நிகழ்ச்சித்திட்ட மாற்றல்கள் மற்றும் 1,023 விண்ணப்பங்கள் கருத்திட்டமாற்றல்களுக்கானது. |
| | 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினை திருத்துதல். | புதிதாக தாபிக்கப்பட்ட அமைச்சுக்களின் வரவு செலவுத்திட்ட ஏற்பாடு களுக்கு அமைவாக புதிய அரசாங்கத்தின் கொள்கை மாற்றல்கள் பின்பற்றப் படும். இது 1897/15 ஆம் இலக்க 2015.01.18 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்த தலின் ஊடாக செயற்படுத்தப்பட்டது. | |

| | | | |
|---|---|---|---|
| | | 2015 சனவரி இறுதிவாரத்தில் அவசர சட்டமூலம் ஒன்றாக ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | 2015.02.07 ஆந் திகதி ஒதுக்கீட்டு சட்ட மூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுத.<br><br>2015 இன் 01 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2015.02.07 ஆந் திகதி கௌரவ சபாநாயகரினால் சான்றுப்படுத்தப்பட்டது.<br><br>அதிமேதகு சனாதிபதி நிதி அமைச்சர் என்ற வகையில் 2015.02.11 ஆந் திகதி ஆணைப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது. |
| | 2015 இன் 01 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான திருத்தம் | 1933/13 ஆம் இலக்க 2015.09.21 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்ட புதிய அமைச்சுக்களுக்கு மீள் ஒதுக்கீடு மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் செயற்பாடுகளை சுமூகமாக முன்னெடுப்பதற்கு கணக்கீட்டு விடயங்களைக் குறைத்தல்.<br><br>2015 நவம்பர் முதல் வாரத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>பாராளுமன்றத்தினால் ஒதுக்கீட்டுச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. | 2015 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2015.10.23 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.<br><br>ஒதுக்கீட்டுச் சட்டம் 2015.11.06 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2015.11.23 ஆந் திகதி வரவு செலவுத்திட்டம் (இரண்டாவது வாசிப்பு) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2015.11.26 ஆந் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br><br>2015.12.03 ஆந் திகதி 2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் சபாநாயகரினால் சான்றுப்படுத்தப்பட்டது.<br><br>2015.12.07 ஆந் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் சனாதிபதியினால் ஆணைப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது. |
| 2. 2016 இற்கான தேசிய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல் | வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வரவு செலவுத்திட்ட வழிகாட்டல்களை வழங்குதல். | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு வழிகாட்டல்களுடன் வரவு செலவுத்திட்ட அழைப்பினை விநியோகித்தல். | பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு திட்டத்தினைப் பயன்படுத்தி 2016-2018 அரசாங்க அபிவிருத்தி கொள்கை வேலைச் சட்டகத்திற்குள் 2016 இற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது. |
| | செலவின முகவராண்மைகள் மற்றும் திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி வரைவு வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | அரசாங்கத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்தல் | நிதி அமைச்சரின் தலைமையில் ஏனைய அமைச்சுக்களின் அமைச்சர் களுடனும் அக்கரை செலுத்துநர் களுடன் தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களுக்கு வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னரான கூட்டங்களை நடாத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்புடைய அமைச்சுக்களுடன் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. | உண்மையான தேவைகளை கவனத்திற் கொண்டு யதார்த்த பூர்வமான வரவு செலவுத்திட்டமொன்றினை தயாரித்தல். | தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் முகவர்களுடன் திறைசேரியின் செயலாளர் மற்றும் பிரதிச் செயலாளர்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் இடம் பெற்றன. |
| | 2016 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. | ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2015 ஒக்டோபர் இறுதி வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>விபரமான மதிப்பீடுகளின் தயாரிப்பு | 2015.10.09 ஆந் திகதிய வர்த்தமானியில் 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பிரசுரிக்கப்பட்டது.<br><br>2015.10.23 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது<br><br>2015.11.20 ஆம் திகதி வரவு செலவுத்திட்டம் (இரண்டாவது வாசிப்பு) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2015.12.19 ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>2015.12.19 ஆம் திகதி கௌரவ சபாநாயகரினால் 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சபாநாயகரினால் சான்றுப்படுத்தப்பட்டது.<br><br>2015.12.21 ஆந் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் சனாதிபதியினால் ஆணைப்பத்திரம் வழங்கப்பட்டது.<br><br>அனைத்துத் தொடர்புடைய செலவின தலைப்புகளினதும் பின்னணித் தகவல்களுடன் விபரமான மதிப்பீடுகள் அச்சிடப்பட்டன. |
| 3. அமைச்சரவை விஞ்ஞாபனம் மீதான அவதானிப்புகளை சமர்ப்பித்தல் | அரசாங்கத்தின், துறை ரீதியான கொள்கை மற்றும் செலவினம் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான சிபாரிசுகளையும் அவதானிப்புகளையும் காலத்திற்கு காலம் வழங்குதல். | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளை உடனுக்குடன் சமர்ப்பித்தல் | அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் அவதானிப்புகள் 245 சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 4. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள உள்ளக முகாமை. | பொது நிர்வாகம்<br><br>குத்தகை வாகன முகாமைத்துவம் | திணைக்களங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனித வளங்கள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளில் வினைத்திறன் மிக்க பயன்பாட்டினை உறுதிப்படுத்தல் | மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 6,901.9 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 2,350.2 மில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 4,551.7 மில்லியன் மூலதனச் செலவினமாகவும் காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் முற்பணக் கணக்குக் கட்டுப்பாடு | வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கடன் மற்றும் முற்பணங்களுக்கான அனைத்து விண்ணப்பங்களும் முற்பணக்கணக்கு வரையறைகளை பேணியதாக காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைப் பின்பற்றி, அனர்த்த கடன், துவிச்சக்கர வண்டிக் கடன், விசேட முற்பணங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பன ரூபா 5,275,649 ஆகக் காணப்பட்டது. |
| | திறன் விருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியின் மூலம் மனித வள அபிவிருத்தி. | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துடன் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சிகளில் 09 பேர் கலந்து கொண்ட அதேவேளை 05 அலுவலர்கள் உள்நாட்டுப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். |
| | அறிக்கைகளை சமர்பித்தல் | பின்வரும் அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டன<br><br>(அ) செயலாற்றுகை அறிக்கை<br>(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு<br>(இ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு மீள் இணக்கம் | பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன<br><br>(அ) செயலாற்றுகை அறிக்கை 2014<br>(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு 2015<br>(இ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு மீள் இணக்கம் 2015 |
| | கணக்காய்வு வினாக்களுக்கான பதில்கள். | கணக்காய்வு வினாக்களைக் குறைத்தல் அரசாங்க கணக்குகள் குழுவுக்கு சமுகமளித்தல். | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் (12) பதிலளிக்கப்பட்டது. |

## 2. 2015 வரவு செலவுத்திட்டத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் செயற்படுத்தல்.

### 2.1 2016 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2014 செப்ரெம்பர் 26 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமொன்றாக 2014 நவம்பர் 24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது. இதற்கமைவாக, முற்பணக் கணக்கு செயற்பாடுகள் உள்ளடங்களாக 2015 ஆம் ஆண்டுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட அரசாங்கத்தின் செலவினம் ரூபா 3,409 பில்லியனாகும்.

எவ்வாறாயினும், 2015 சனவரியில் சனாதிபதித் தேர்தல் இடம்பெற்றதன் பின்னர், அமைச்சரவை மாற்றப்பட்டதுடன் அரசாங்கத்தின் புதிய கொள்கை முன்னெடுப்புகள் ''100 நாள் நிகழ்ச்சித்திட்டம்'' என்பதினூடாக அறிமுகப்படுத்தப்பட்டது. 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் புதிய செலவின தலைப்புகளுக்கு அமைவாக வரவு செலவுதிட்ட ஏற்பாடுகள் மீள் ஒழுங்குபடுத்துவதற்கான கொள்கை மாற்றங்களை உள்ளடக்கும் வகையில் திருத்தப்பட வேண்டியிருந்தது. இதற்கமைவாக, வரைவு சட்டமூலமானது 2015 சனவரி 29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2015 இன் 1 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்ற வகையில் 2015 பெப்ரவரி 7 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் உள்ளடங்களாக அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 2,172 பில்லியனாகும். வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை குறைக்கின்ற நோக்கத்துடன், ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட செலவினமானது ரூபா 2,172 பில்லியனிலிருந்து ரூபா 2,101 பில்லியனாக திருத்தப்படும் அதேவேளை ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏனைய அட்டவணைகள் எவ்வித மாற்றமும் இல்லாது காணப்பட்டது.

2015 இன் 1 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்திற்கமைவாக அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் பின்வருமாறு.

| | |
|---|---|
| • அரசாங்கத்தின் பொதுவான சேவைகள் தொடர்பான செலவினம். | ரூபா 2,101 பில். |
| • விசேட சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதுடன் திரட்டு நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியதுமான செலவினம் | ரூபா 1,237 பில். |
| • முற்பணக் கணக்கு செயற்பாடுகள் தொடர்பான செலவினம் | ரூபா 4.0 பில். |

2015 இன் 1 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமானது பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடு செய்வதற்கும் அரசாங்கத்தின் தொழிற்பாடுகளை இலகுபடுத்துகின்ற பொழுது எழுகின்ற கணக்கீட்டு சிக்கல்களை குறைக்கும் வகையிலும் 2014 நவம்பர் 25 ஆம் திகதி 2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் மேலும் திருத்தப்பட்டது. இத் திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் 2015 இன் 10 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தின் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை என்பன எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்து காணப்பட்டது.

## 2.2 எதிர்பாரா நிதியத்தின் பயன்பாடு

2015 ஏப்ரல் 06 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1909/20 ஆம் இலக்க மற்றும் 2015 ஏப்ரல் 10 ஆம் திகதிய மற்றும் 1909/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் அமைச்சுக்களின் மொத்த எண்ணிக்கை 30 இலிருந்து 41 ஆக அதிகரித்தது. இந்த 11 அமைச்சுக்களுக்கும் செலவின தலைப்புகள் காணப்படாததால் தக்காலிக நடவடிக்கைகளாக அரசியல் அமைப்பின் 151(2) ஆம் உறுப்புரையின் கீழ் எதிர்பாரா நிதியத்திலிருந்து முற்பணமாக ஒவ்வொரு அமைச்சுக்கும் ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 வரவு செலவுத் திட்டத்தச் செயலாற்றுகை - 2015

வரவு செலவுத்திட்ட உரையுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அச்சிடப்பட்ட மதிப்பீடுகளின் நிதி வழங்கல் மூலங்களான நோக்கக் குறியீட்டினால் கருத்திட்டங்களுக்கு அமைவாக தலைப்பின் அடிப்படையிலான செலவினங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சட்டமாக மாறியதுடன் நிதி அமைச்சர் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் சுட்டிக் காட்டப்பட்டவாறு செலவினங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தினை வழங்கும் ஆணைப்பத்திரத்தினை வெளியிட்டார். 2015 ஆம் ஆண்டுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கமைவாக 189 செலவின தலைப்புகள், செலவின முகவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அதில் 19 விசேட செலவின அலகுகளும் 50 அமைச்சுக்களும் 120 திணைக்களங்களும் இவற்றுள் அடங்குகின்றன.

### 2.3.1 2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

சட்டத்திற்கமைவாக 2015 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 3,203 பில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 1,849 பில்லியன் அல்லது 58 சதவீதம் இச் சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட செலவினமாக காணப்பட்டதுடன் ரூபா 1,354 பில்லியன் அல்லது 42 சதவீதம் விசேட சட்ட சேவைகளின் கீழான செலவினங்களுக்காகவும் எஞ்சிய ரூபா 4 பில்லியன் முற்பணக் கணக்கு செயற்பாடுகளுக்கான செலவினமாகக் காணப்பட்டது. 2015 இற்கான பதிவாகிய மொத்தச் செலவினத்தில் அரசாங்கத்தின் பொதுவான சேவைகள் தொடர்பான உண்மையான செலவினம், ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் கீழ் வழங்கப்பட்ட தொகை ரூபா 1,849 பில்லியனாகும். இது 2014 உடன் ஒப்பிடுகையில் 2015 இல் ரூபா 320 பில்லியனாக அல்லது 21 சதவீதத்தினால் அதிகரித்தது. இது மூலதனச் செலவினம் மற்றும் சம்பளங்கள், கூலிகள், நலன்புரி, மின்சாரம், நீர், துப்பரவேற்பாடு, எரிபொருள், உணவு மற்றும் சீருடைகள் போன்ற தொழிற்பாட்டுச் செலவினங்கள் உள்ளடங்களாக நடைமுறைச் செலவினம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான செலவினங்கள்

என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தது. மதிப்பிடப்பட்ட ரூபா 1,237 பில்லியனுக்கெதிராக விசேட சட்ட சேவைகளின் கீழ் உண்மையான செலவினம் ரூபா 1,354 பில்லியனாக காணப்பட்டது. ஓய்வூதியத் திருத்தம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளில் அதிகரிப்பு என்பன விசேட சட்டங்களின் செலவின அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்தது. விசேட சட்ட சேவைகள் தொடர்பான செலவினத்திற்கான மொத்த பயன்பாட்டு ஏற்பாடு 2014 இல் காணப்பட்ட ரூபா 1,073 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 இல் ரூபா 117.5 பில்லியனாக (11 சதவீதத்தினால்) அதிகரித்தது.

ரூபா.மில்

| அமைச்சின் / செலசினவிடயத்தின் பெயர் | மதிப்பீடுசெய்யப்பட்ட ஏற்பாடுகள் | தி. நா. செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல் | மொத்த ஏற்பாடுகள் (கூட்டு தொகை (1)+(2)) | மொத்த ஏற்பாடுகள் (கூட்டு தொகை (1)+(2)+(3)) | மெய் செலவினம் | பயன்படுத்தப்படாத ஏற்பாடு (4)-(5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 - 22 விசேட செலவின அலகு | 14,843 | 588 | 1 | 15,433 | 13,771 | 1,662 |
| புத்த சாசன | 1,517 | 372 | | 1,889 | 1,814 | 75 |
| நிதி | 76,187 | 56,482 | | 132,669 | 121,002 | 11,667 |
| பாதுகாப்பு | 294,177 | 13,967 | | 308,144 | 296,787 | 11,357 |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் | 11,836 | 8,030 | 3 | 19,870 | 14,910 | 4,959 |
| அனர்த்த முகாமைத்துவம் | 4,065 | 40 | | 4,105 | 2,845 | 1,260 |
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் | 12,242 | 8 | | 12,250 | 12,237 | 13 |
| நீதி | 9,276 | 42 | | 9,318 | 8,000 | 1,318 |
| சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச வைத்தியம் | 148,184 | 1,722 | | 149,906 | 130,896 | 19,011 |
| வெளிநாட்டலுவல்கள் | 9,783 | 323 | | 10,106 | 8,544 | 1,562 |
| போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை | 79,683 | 10,351 | | 90,034 | 68,783 | 21,251 |
| உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கல் | 230,629 | 11,540 | | 242,169 | 222,136 | 20,033 |
| விவசாயம் | 52,096 | 17,212 | | 69,308 | 67,349 | 1,959 |
| மின்வலு புதுப்பித்தல் சக்தி | 1,420 | 7,816 | | 9,236 | 7,910 | 1,326 |
| மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் | 4,843 | 525 | | 5,368 | 4,465 | 903 |
| உள்நாட்டலுவல்கள் | 43,645 | 2,353 | | 45,998 | 41,283 | 4,715 |
| பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக | 5,708 | 60 | | 5,768 | 3,508 | 2,260 |
| வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை | 5,602 | 1,335 | | 6,937 | 6,821 | 116 |
| சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி | 78,273 | 6,226 | | 84,500 | 81,308 | 3,192 |
| கல்வி | 62,134 | 912 | | 63,046 | 60,446 | 2,600 |
| பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் | 160,541 | 16,652 | 12,500 | 189,692 | 182,174 | 7,519 |
| பெருந்தோட்டக் கைத்தொழில் | 16,101 | 179 | | 16,280 | 15,016 | 1,264 |
| விளையாட்டு | 4,048 | 12 | | 4,059 | 3,334 | 725 |
| மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு, சமுதாய அபிவிருத்தி | 1,146 | - | | 1,146 | 1,057 | 90 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் | 7,025 | 4 | | 7,029 | 2,159 | 4,870 |
| கைத்தொழில் மற்றும் வானிப | 6,243 | 190 | | 6,433 | 4,977 | 1,456 |
| பெற்றோலிய வளங்கல் அபிவிருத்தி | 360 | 4,484 | | 4,844 | 4,744 | 100 |
| மீன்பிடி மற்றும் நீரியியல் வளங்கள் அபிவிருத்தி | 6,081 | 122 | | 6,203 | 5,034 | 1,169 |
| காணி | 7,793 | 48 | | 7,841 | 7,246 | 595 |
| கிராமிய பொருளாதார அலுவல்கள் | 19,358 | 134 | | 19,492 | 12,929 | 6,563 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | 285,858 | 12,577 | | 298,435 | 226,995 | 71,440 |
| தேசிய கலந்துரையாடல்கள் | 725 | 4 | | 729 | 535 | 193 |
| பொது தொழில் முயற்சி அபிவிருத்தி | 1,028 | 179 | | 1,207 | 1,190 | 17 |
| சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்த்தவ சமய அலுவல்கள் | 293 | 25 | | 319 | 211 | 107 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் | 39,683 | 365 | | 40,048 | 32,351 | 7,697 |
| நிலையான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் | 3,004 | 348 | | 3,352 | 3,192 | 160 |
| மாநகர மற்றும் மேற்குப் பிராந்திய அபிவிருத்தி | 18,032 | 176 | | 18,208 | 7,615 | 10,594 |
| உள்நாட்டலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் | 8,001 | - | | 8,001 | 4,385 | 3,616 |
| தெற்கு அபிவிருத்தி | 56 | - | | 56 | 39 | 17 |
| தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க | 33 | - | | 33 | 7 | 26 |
| நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் | 15,153 | 24,428 | | 39,581 | 30,437 | 9,144 |
| துறைமுகங்கள் மற்றும் விமானத்துறை | 2,228 | - | | 2,228 | 215 | 2,013 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 1,146 | - | | 1,146 | 963 | 182 |
| சட்டம் மற்றும் ஒழுங்கு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு | 72,021 | 595 | | 72,616 | 68,247 | 4,369 |
| தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் | 3,292 | 439 | | 3,731 | 3,516 | 215 |
| தொலைத் தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு | 1,441 | - | | 1,441 | 859 | 582 |
| உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் | 776 | 1 | | 776 | 597 | 179 |
| விஞ்ஞானம், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி | 3,724 | 33 | | 3,757 | 3,148 | 609 |
| திறன் விருத்தி மற்றும் வாழ்க்கை தொழில் பயிற்சி | 10,692 | 71 | | 10,763 | 8,367 | 2,396 |
| நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கல் முகாமைத்துவம் | 20,341 | 271 | | 20,612 | 22,338 | (1,726) |
| ஆரம்பக் கைத்தொழில்கள் | 981 | 53 | | 1,034 | 998 | 36 |
| **படுகடன் சேவைக் கொடுப்பனவு** | **1,265,000** | **-** | **124,907** | **1,389,907** | **1,373,593** | **16,314** |
| **திறைசேரி நானாவித தலைப்பு** | **209,656** | **(201,296)** | **-** | **8,360** | **-** | **8,360** |
| **முழு மொத்தம்** | **3,338,000** | **-** | **137,411** | **3,475,411** | **3,203,280** | **272,131** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம்*

## 2.4 2015 – 2017 நடுத்தரகால செலவின வேலைச்சட்டகத்தில் 2015 வரவு செலவுத்திட்ட துறை ரீதியான முன்நோக்கு

2015 வரவு செலவுத்திட்டமானது அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாய வேலைச் சட்டகத்தினை பிரதானமாக அடிப்படையாகக் கொண்டுள்ளது. பின்வரும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் 2015 வரவு செலவுத்திட்ட உருவாக்கல் மற்றும் செயற்படுத்துகையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

(அ) துறை அடிப்படை – 2015 இற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு ஒவ்வொரு துறையினதும் அபிவிருத்திக்காக தொடர்புடைய அக்கறை செலுத்துநர்களினால் உருவாக்கப்பட்ட துறைரீதியான கொள்கை வேலைச் சட்டகத்திற்குள் அமைந்திருந்தது.

(ஆ) யதார்த்த மதிப்பீடு – 2015 வரவு செலவுத்திட்டமானது அரசியல் அமைப்பின் 150(2) மற்றும் 150(3) ஆம் உறுப்புரைகளின் நியதிகளுக்கு அமைவாக வழங்கப்பட்ட வரையறைகளின் கீழ் உண்மையான செலவின மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

(இ) செயலாற்றுகை அற்ற கருத்திட்டம் – அத்தகைய கருத்திட்டங்கள் அனைத்தினதும் மீள் உருவாக்கம் மற்றும் இல்லாதொழித்தல் என்பன சில வருடங்களாக மதிப்பிடப்பட்ட அடிப்படையில் இடம் பெற்றுள்ளது.

(ஈ) பிரதிபன்னல் மற்றும் மேலதிக வேலைகளை தவிர்த்தல் - ஒவ்வொரு அமைச்சுக்களுக்கும் இடையில் ஒன்றிலொன்று தங்கியிருத்தல் அல்லது இரட்டைப் பணிகளை புரிவதில் முறையான அங்கீகாரத்தினை வழங்குதல். செலவின முகவராண்மைகள் மற்றும் மாகாண சபைகள் கருத்திட்டம் மற்றம் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட ஒரே மாதிரியான செயற்பாடுகளுக்கிடையில் முறையாக பகிர்வு இடம் பெறுவதற்கான துறைரீதியான ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்தும் வகையில் வழிகாட்டப்பட்டுள்ளன.

## 2.5 2015 வரவு செலவுத்திட்டத்தினை முகாமை செய்தல்

### 2.5.1 மொத்த அரசாங்க செலவினம்

அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் 2015 இல் ரூபா 3,203 பில்லியனாக காணப்பட்டதுடன் அவற்றுள் 52.2 சதவீதம் அல்லது ரூபா 1,673 பில்லியன் மீண்டெழும் செலவினம் என்பதுடன் மூலதனச் செலவினம் ஏறக்குறைய ரூபா 684 பில்லியன் 21.3 சதவீதமாக காணப்பட்டது. அரசாங்க பொதுப்படுகடன் 2015 இல் 846 பில்லியனாக அல்லது 26.4 சதவீதமாகக் குறைவடைந்தது. மொத்தச் செலவினம் 2014 இல் ரூபா 2,602 பில்லயனிலிருந்து 2015 இல் ரூபா 601 பில்லியனாக அல்லது 23 சதவீதத்தினால் அதிகரித்தது. எவ்வாறாயினும் மொத்தச் செலவினம் குறித்த வருடத்திற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 3,338 பில்லியனைவிட குறைவாகக் காணப்பட்டது. மீண்டெழும் செலவினம் முன்னைய வருடத்தினை விட ரூபா 303 பில்லியனாக அல்லுத 22.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

### 2.5.2 பொது செலவின முகாமைத்துவம்

2015 வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறைக்குள் முகாமை செய்யப்படும். அதேவேளை 2015 – 2017 நடுத்தரகால செலவின வேலைச் சட்டகத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்துகின்றது.

#### 2.5.2.1 நிதி மாற்றல்கள்

திருத்தப்பட்டவாறான 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைவாக, நிதிப்பிரமாணக்குறிப்பு 65 மற்றும் 66 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நடபடி முறைகள் மற்றும் வரையறைகளைப் பின்பற்றி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தச் செலவின வரையறைக்குள் பயன்படுத்தப்படாத ஏற்பாடுகளின் மாற்றல் அல்லது மீள் ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. இச்செயன்முறையின் மீண்டெழும்

செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாது அல்லது பயன்படுத்தப்படமாட்டாது என காணப்படுபவை அதேநிகழ்ச்சித்திட்டத்திற்குள் மீண்டெழும் அல்லது மூலதனச் செலவினத்திற்கு மாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டதுடன் அல்லது அதே செலவினத் தலைப்புக்குள் வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் மீண்டெழும் அல்லது மூலதன செலவினத்திற்கும் மாற்ற முடியும் அதேபோன்று பயன்படுத்தப்படாத அல்லது பயன்படமாட்டாதென்ற மூலதனச் செலவினங்கள் அதே நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதன செலவினத்திற்கு மாற்றுவதற்கும் அனுமதிக்கப்பட்டது.

### 2.5.2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள்

குறித்த வருடத்தின்போது பல்வேறு எதிர்பாரா அவசர தேவைப்பாடுகளை முகாமைசெய்வதற்கு மேலதிக குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தைத் தடுப்பதற்கு பிரதான சாதனங்களில் ஒன்றாகக் காணப்படும் திறைசேரி குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவித பொறுப்புக் கருத்திட்டத்தினால் (திறைசேரி நானாவித செலவினத் தலைப்பு - TMV) அரசாங்க செலவின முகாமைத்துவம் பொதுவாக சிறந்தமுறையில் பயன்படுத்தப்படுகின்றது.

எதிர்பாராத திடீர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தவிர்க்கும் அதேவேளை எதிர்பாராத அவசர தேவைப்பாடுகளுக்கு நிதி ஏற்பாடுகளைச் செய்யும் வகையில் 2015 அரசாங்க செலவினத்தினை முகாமை செய்வதற்கான சாதனமொன்றாக திறைசேரியினால் மேலதிக ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் கருத்திட்டம் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டுவருகின்றது. அரசாங்க செலவினம் மற்றும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, நாட்டில் சாதகமான அரசிறை சூழல் ஒன்றினை மேம்படுத்துவதற்கு முடியுமான வகையில் முற்பண ஏற்பாடுகள் போன்ற ஏனைய அரசிறை இலக்குகளை கவனத்திற் கொண்டு வரலாற்று ரீதியான போக்கினையும் ஆராய்ந்து வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படும் போது இச் சாதனத்திற்காக குறிப்பிடத்தக்கதொரு தொகை திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. குறைநிரப்பு ஒத்துழைப்புக்கான ஏற்பாடுகள் பின்வருமாறு பயன்படுத்தப்பட்டது;

### 2.5.2.3 திறைசேரி நானாவித செலவின தலைப்பின் நிலைமை – 2015

ஆரம்பத்தில் இக் கருத்திட்டத்திற்காக 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஊடாக ரூபா 446 பில்லியன் ஒதுக்குிட செய்யப்பட்டது. எவ்வாறாயினும், சனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், அமைச்சரவையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இக் கருத்திட்டத்திற்கான ஏற்பாடுகள் ரூபா 457.64 பில்லியனாக அதிகரித்தது.

2015 டிசெம்பர் 3 ஆந் திகதி ஒதுக்கீட்டுச் சட்டம் இறுதியாகத் திருத்தப்பட்ட போது, கணக்கீட்டு விவகாரங்களை ஏற்பாடு செய்யும் வகையில் இக் கருத்திட்டத்தின் மொத்த ஏற்பாடு ரூபா 209.65 பில்லியனாக திருத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய தொடர்புடைய செலவின தலைப்புகளுக்கு இக் கருத்திட்டத்திலிருந்து ஏற்கனவே வழங்கப்பட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை. திருத்தப்பட்ட இந்த ஏற்பாடுகளிலிருந்து ரூபா 201.29 பில்லியன் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் மேலதிக ஒதுக்கீடுகளாக தொடர்புடைய செலவின முகவர்களுக்கு மீள்ஒதுக்கீடு செய்யப்பட்டது. அனைத்து குறைநிரப்பு ஒதுக்கீடுகளும் 2015 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.

2015 டிசெம்பர் 31 அன்றுள்ளவாறு திறைசேரி நானாவித தலைப்பினூடாக வழங்கப்பட்ட மேலதிக ஏற்பாடுகள் ரூபா 201.29 பில்லியன் செலவின தலைப்புகளுக்கு மாற்றப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 63.44 பில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 137.85 பில்லியன் மூலதனச் செலவினமாகவம் காணப்பட்டது.

| அட்டவணை 2.5.2.3 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளின் சுருக்கம் | | |
|---|---|---|
| | **அச்சிடப்பட்ட மதிப்பீடுகளின்படி நோக்கம்** | **தொகை ரூபா மில்லியன்** |
| 1. | வரவு செலவுத்திட்ட உரையில் முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்பு, சம்பள முரண்பாடுகளை திருத்துதல், புதிய ஆட்சேர்ப்புகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்க துறை ஓய்வூதிய அதிகரிப்பு. | 33,969 |
| 2. | வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் அடிப்படை எடுகோள்களில் மாற்றங்களிலிருந்து மேலதிகச் செலவினம் மற்றும் பொறுப்புக்களை ஈடுசெய்வதற்கான மேலதிக நிதி ஏற்பாடுகள். | 42,454 |
| 3. | வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்கான நிதி ஏற்பாடுகள். | 5,976 |
| 4. | வரிகள் மற்றும் தீர்வைகள் உள்ளடங்களான வெளிநாட்டு நிதியளிப்பு மற்றும் ஏனைய தரப்பு தேவைப்பாடுகள் ஊடாக அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மூலதனச் செலவினத்தின் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்கான நிதி ஏற்பாடு. | 63,397 |
| 5. | அரச உடமை தொழில்முயற்சிகளின் ஐந்தொகை மீள்கட்டமைப்புக்கான முறிகளை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள். | 55,500 |
| | **மொத்தம்** | 201,296 |

*மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

## 2.5.3 வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடுதல்

2015 ஆம் ஆண்டின் போது வரவு செலவுத்திட்டத் திணைக்களம் பின்வரும் சுற்றுநிருபங்களை வெளியிட்டுள்ளதுடன் செலவின முகவராண்மைகளின் செலவின முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.

**அட்டவணை 2.3 வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களின் வெளியீடு**

| திகதி | சுற்றுநிருப இல. | தலைப்பு |
|---|---|---|
| **01.01.2015** | 01/2015 | 2015 வரவு செலவுத்திட்டத் திருத்தம் - புதிதாக தாபிக்கப்பட்ட அமைச்சுக்களின் பண ஒதுக்கீடு மற்றும் கணக்கீட்டின் அடிப்படையிலான செலவினத்திற்கான அங்கீகாரம் |
| **31.03.2015** | 02/2015 | பொது முகாமைத்துவத்தினை முகாமை செய்தல் - 2015 நிதி ஆண்டு |
| **24.07.2015** | 03/2015 | வரவு செலவுத்திட்ட அழைப்பு – 2016, வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள் |
| **02.10.2015** | 04/2015 | பொது செலவின முகாமைத்துவம் - கலண்டர்கள் மற்றும் நாட்குறிப்பேடுகளை அச்சிடுதல். |
| **09.12.2015** | 05/2015 | 2015 வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல் மற்றும் கணக்கீடு |
| **29.12.2015** | 06/2015 | தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் நிதி அளிக்கப்பட்ட நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை செயற்பாடுகளை கண்காணித்தல். |
| **29.12.2015** | 07/2015 | 2016 வரவு செலவுத்திட்ட செலவின அங்கீகாரம் மற்றும் பொதுச் செலவின முகாமைத்துவம் |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## 2.6 முற்பணக் கணக்குகளை கண்காணிப்புச் செய்தல்

2015 இல் முற்பணக் கணக்குகள் தொடர்பான தொழிற்பாடுகளை இத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணிப்புச் செய்தது. 197 மொத்த முற்பணக் கணக்குகளில் 186 அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்குகளும் 4 வர்த்தக முற்பணக் கணக்குகளும் 3 களஞ்சிய முற்பணக் கணக்குகளும் 4 விசேட முற்பணக் கணக்குகளும்

செயற்படுத்தப்படுகின்றது. ரூபா 20,728 மில்லியன் முற்பணக் கணக்கு செலவின வரையறைகளை நிறைவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முற்பணக் கணக்கு வரையறையினை உருவாக்குதல் அமைச்சு மற்றும் திணைக்களம் ஒவ்வொன்றினதும் தேவையினைக் கருத்திற்கொண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக 6 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்குகளும் 6 ஏனைய முற்பணக் கணக்குகளினதும் வரையறைகள் திருத்தப்பட்டதுடன் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 3. 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கை நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு 2016 – 2018 இற்கான நடுத்தரகால வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகம் ஒன்றினை உருவாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக, 2016 வரவு செலவுத்திட்டம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை 8 சதவீதத்திற்கு மேலாக வளர்ச்சியடையச் செய்யும் வகையில் நடுத்தர காலத்தில் மொ.உ.உற்பத்தியில் 6-7 சதவீதமாக அதிகரிக்கும் வகையில் அரசாங்க முதலீடு அதிகரிக்கப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.1 வரவு செலவுத்திட்ட தயாரிப்புக்கான வழிகாட்டல்கள்

2016 வரவு செலவுத்திட்ட அழைப்பானது வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களையும் பணிப்புரைகளையும் வழங்குவதுடன் அரசாங்க செலவினம் தொடர்பான மீளாய்வு ஒன்றினூடாக பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்ட தயாரிப்பொன்று அறிமுகப்படுத்தும் வகையில் இது வெளியிடப்பட்டது. இதற்கமைவாக இரட்டை பணிகள் மற்றும் பிரதிபன்னல் ஆகிய விடயங்களைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட வளங்களின் வினைத்திறன் மிக்க பகிர்வினை முன்னெடுக்கும் வகையில் 2016 இலிருந்து வரவு செலவுத்திட்ட செயன்முறையினை தயாரிக்கும் வகையில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

எழுந்தவாறான துறைரீதியான வரையறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் வரையறைகளின் அடிப்படையில் உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் அழைக்கப்பட்டு ஒவ்வொரு அமைச்சுக்குமான வரையறைகள் இனங்காணப்பட்டு தீர்மானிக்கப்படும். அமைச்சுக்களின் செயலாளர்கள் குறித்த அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான இறுதி விளைவினை அடைந்து கொள்ளும் வகையில் உறுதிப்படுத்துவதற்கு வேண்டப்படுவர். இதனை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி மற்றும் தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள் என்பவற்றுக்கிடையில் கலந்துரையாடுவதற்காக 2015 செப்ரம்பர் மாதமளவில் வரைவு மதிப்பீடுகளை சமர்ப்பிக்கும்படி அமைச்சுக்களிடம் வேண்டப்படும்.

## 4. விசேட செயற்பாடுகள்

### 4.1 வர்த்தக ரீதியற்ற அரசாங்க தொழில் முயற்சிகளின் வரவு செலவுத்திட்ட முகாமை

2015 ஆம் ஆண்டின் போது திரட்டிய நிதியத்திலிருந்து நிதி ஒத்துழைப்பு வழங்கப்படுகின்ற 122 தொழில் முயற்சிகளின் (நியதிச் சட்டசபைகள்) பொது நிதி மற்றும் வரவு செலவுத்திட்ட முகாமை தொடர்பான அனைத்து விடையங்களும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இந் நிறுவனங்கள் தொடர்பான பின்வரும் பணிகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைனக்களத்தினால் அவற்றினது நிதி மற்றும் முகாமைத்துவத் திறமையினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

- வருடாந்த வரவு செலவுத்திட்டம், வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை என்பவற்றினை பரிசீலனை செய்து பகுப்பாய்வு செய்வதன் மூலம் இந் நியதிச்சட்ட சபைகளின் செயலாற்றுகை மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை மீளாய்வு செய்தல்

- திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்துடன் இணைந்து மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் மீதான மாதாந்த காசுக் கட்டுநிதியினை விடுவிப்பதற்கான வேண்டுகோள்களை பரிசீலனை செய்தல்.
- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ருபா 500,000 இனை விஞ்சிய மூலதன செலவினத்திற்கான தேவையான அங்கீகாரத்தினை வழங்குதல்.
- நியதிச் சட்ட சபைகளின் நிதிச் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக அறிக்கைகளை சமர்ப்பிப்பதனுடன் பாராளுமன்றத்தினால் கூட்டப்படுகின்ற பொது தொழில் முயற்சிகளுக்கான குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- அத் தொழில் முயற்சிகளினால் வேண்டப்படும் புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரத்தினை வழங்குவதுடன் தேவையான போது நிதிக் குத்தகை திட்டத்தின் கீழ் புதிய வாகனங்களை கொள்வனவு செய்து கையளித்தல்.
- கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பரிசோதனை அறிக்கை மற்றும் இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு வினாக்களினை மீளாய்வு செய்தல். இவ் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தொடர்புடைய நியதிச் சட்டசபைகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் அத்தகைய கணக்காய்வு வினாக்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதனை தடுப்பதற்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனைஉறுதிப்படுத்தல்.
- நியதிச்சட்ட சபைகளுக்கு புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சிபாரிசுகளை சமர்ப்பித்தல் மற்றும் அத்தகைய நிறுவனங்களின் உண்மையான தேவை மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் கிடைப்பனவு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு சிபாரிசுகளை வழங்குதல்.
- பல்வேறு நோக்கங்களுக்காக வெளிநாட்டுப் பயணங்களுக்கு தேவையான தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் அங்கீகாரத்தினை வழங்குதல். (பயிற்சி நெறிகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள், மாநாடுகள் போன்றன)
- பாரிய மூலதன கருத்திட்டங்களை செயற்படுத்தல் போன்ற நிதி மற்றும் முகாமைத்துவ நிலையங்கள் மீதான நியதிச் சட்ட சபைகளுக்கு ஆலோசனை வழங்குதலும் அவற்றினை ஒருங்கிணைத்தலும்.

### 4.2 அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான அவதானிப்புக்கள்

2014 ஆம் ஆண்டின் போது கௌரவ நிதி திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்புகளாக 245 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டது.

### 4.3 வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரம்

#### 4.3.1 வாகனங்கள் கொள்வனவுக்கான தேசிய வரவு செலவுத்திட்ட அங்கீகாரம்

அரசாங்க நிறுவனங்களின் வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரத்தினை 1990.01.31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அகமைவாக, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் வழங்கியுள்ளது. இதற்கமைவாக, அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அனைத்து நியதிச்சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடமைக் கம்பனிகள் என்பவற்றினால் சுயநிதியின் மூலம் அல்லது வேறு ஏற்பாடுகளின் மூலம் வாகனங்கள் கொள்வனவுக்காக அத்தகைய ஏதேனும் கொள்வனவுக்கான குழுவின் முன் அங்கீகாரம் பெறப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. பல்வேறுபட்ட அரசாங்க முகவராண்மைகளினால் வாகனங்கள் கொள்வனவுக்கான வேண்டுகோள்களை தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் தொடர்ந்து மீளாய்வு செய்வதுடன் அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2014 ஆம் ஆண்டின்போது இத்திணைக்களமானது 1496 வாகனங்கள் கொள்வவுக்கான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது.

**அட்டவணை 4.1: வாகன அடிப்படையில் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்கள அங்கீகாரம் வழங்கப்பட்ட வாகனங்கள் - 2015**

| வாகனத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வான்கள் | 12 |
| சிங்கிள் / டபிள்/குரூவ்கப் | 140 |
| முச்சக்கர வண்டி | 10 |
| லொறிகள் / ட்ரக்குகள் | 03 |
| மோட்டார் சைக்கிள்கள் | 47 |
| ஏனையவை (ட்ரக்டர்/ட்ரெயிலர்/தண்ணீர் பவுசர்கள்,போன்றன...) | 42 |
| **மொத்தம்** | **254** |

*மூலம் : தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம்*

### 4.3.2 அரசாங்கத்துறைக்கு வாகனங்கள் கொள்வனவு

நிதிக் குத்தகை முறைமையில் அரசாங்க நிறுவனங்களின் பயன்பாட்டுக்காக வாகனங்களின் கொள்வனவு 2010.08.30 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதுடன் அரசாங்கம் பொதுச் செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. வாகனத்தின் செலவினம் 05 வருடங்களுக்கு மேலாகப் பகிரப்படுகின்றது என்ற வகையில் காசுப் பாய்ச்சல் முகாமை செய்யப்படுவதற்காக இம்முறைமை பிரயோகிக்கப்பட்டதுடன் இறுதியில் வாகனம் குறித்த நிறுவனத்திற்கு உரிய ஆதனமாக மாறுகின்றது.

2015 காலப் பகுதியில் மோட்டார் கார்கள், டபள் கப்கள் உள்ளடங்களாக 1343 வாகனங்களை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் விடுவித்துள்ளதுடன், இவ்வாகனங்களுக்கான குத்தகைக்காக மாத்திரம் ரூபா 4,547 மில்லியன் செலவிடப்பட்டது.

கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேவை அடிப்படையிலான மதிப்பீட்டிற்கிணங்க அரசாங்க நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 4.4 சபைகளிலும் குழுக்களிலும் பதவியணியினர் பங்குபற்றுதல்கள்

இத்திணைக்களத்தின் பெரும்பாலான பதவிநிலை அலுவலர்கள் நியதிச் சட்டசபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடைமை கம்பனிகளின் (GOCs) பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்களாக (திறைசேரி பிரதிநிதிகளாக) பணியாற்றியுள்ளனர். அத்துடன் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திரச் சபைகள் (CATBs) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் (TECs) உறுப்பினர்களாக திறைசேரி செயலாளர் சார்பாக நியமனம் பெற்றனர். அதற்கு மேலதிகமாக இந்தத்திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் குழு (COPA) மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் குழு (COPE) என்பவற்றில் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பங்குபற்றினர்.

## 5. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அதன் வகிபாகம் நிரல் அமைச்சுக்களின் செலவின மதிப்பீடுகளின் ஏற்பாடுகளை பிரதிநிதித்துப் படுத்தும் பின்வரும் துறைகளின் கீழ் வகுப்பாக்கமொன்று செய்யப்பட்டுள்ளது.

1. அரசாங்க சேவை
2. தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட அமுல்படுத்துகை
3. மனித வளங்கள்
4. உட்கட்டமைப்பு
5. நிதி
6. சமூகப் பாதுகாப்பு
7. சுற்றாடல்
8. மெய்ப் பொருளாதாரம்

## 5.1 திணைக்களத்தின் பதவியணி

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 06/2006 ஆம் இலக்க சுற்று நிறுபத்துக்கு அமைவாக 2015 இல் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்புக்குள் பின்வரும் சேவை மட்டங்களின் கீழ் அலுவலர்கள் கடமையாற்றியுள்ளனர்.

| சேவை மட்டம் | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 38 |
| மூன்றாம் நிலை மட்டம் | 04 |
| இரண்டாம் நிலை மட்டம் | 75 |
| ஆரம்ப மட்டம் | 38 |

2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் தற்பொழுது காணப்படும் பதவியணியும் பின்வருமாறு.

**அட்டவணை 5.1 : 2013 ஆம் ஆண்டிற்கான பதவியணி**

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 02 | 01 |
| பணிப்பாளர் | 14 | 11 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | 20 | 15 |
| கணக்காகாளர் | 01 | 00 |
| நிருவாக அலுவலர் | 01 | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | 02 | 01 |
| தகவல் தொழிநுட்ப அலுவர் | 01 | 00 |
| கருத்திட்ட அலுவலர் | 04 | 00 |
| வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | 38 | 28 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 01 | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் | 09 | 08 |
| முகாமைத்துவ உதவியாளர் | 23 | 23 |
| சாரதி | 16 | 16 |
| அலுவலக உதவியாளர் | 22 | 19 |
| **மொத்தம்** | **155** | **125** |

### 5.2 மனித வள அபிவிருத்தி

இத் திணைக்களமானது அதன் பதவியணியினர் தமது அலுவலக ஆற்றல்களில் பல்வேறு கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு மேலதிகமாக, அவர்களின் உயர்தொழில் திறமைகள் மற்றும் செயற்றிறன் என்பவற்றினை அதிகரிக்கும் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் பின்வரும் உள்நாட்டு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அனுப்ப முடியுமாக இருந்தது.

### 5.2.1. வெளிநாட்டு பயிற்சி/கருத்தரங்குகள்/கூட்டங்கள்

2015 ஆம் ஆண்டின்போது பின்வரும் பதவியணி உறுப்பினர்கள் பல்வேறுபட்ட துறைகளில் வெளிநாட்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

| இல | அலுவலரின் பெயர் | பதவி | நிகழ்ச்சித்திட்டம் | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருமதி. கே.ஜி.கே. விமலவீர | மேலதிக பணிப்பாளர் நாயகம் | சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான 48 ஆவது ஆணைக்குழு | நியூயோக் | 2015.04.13-2015.04.17 |
| 2 | திருமதி. வை.பி. சுமனா | பணிப்பாளர் | பொருளாதார உலகமயமாதல் அபிவிருத்தி நாடுகளுக்கான சீனாவின் தயாரிப்பு | சீனா | 2015.05.21-2015.06.10 |
| 3 | திரு. ஏ.எச்.எஸ். குணவர்த்தன | பணிப்பாளர் | ADB-OECD அனர்த்த நிகழ்வுகளுக்கான நிதியளிப்பு | பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியா | 2015.09.15-2015.09.16 2015.09.17-2015.09.18 |
| 4 | திருமதி. எம்.என். அனோமா நந்தனி | பணிப்பாளர் | ஆசிய பசுபிக் பொது இலத்திரனியல் கொள்வனவு வலையமைப்பு ஆரம்ப மாநாடு | பிலிக்பைன்ஸ் | 05.10.2015-06.10.2015 |
| 5 | திருமதி. பியங்கா என். கமகே | பணிப்பாளர் | யப்பான் சர்வதேச நாணய நிதிய பேரண்டப் பொருளாதார கருத்தரங்கு – 2015 | யப்பான் | 2015.02.21 - 2015.02.28 |
| 6 | திருமதி. நாலனி அமரதுங்க | பணிப்பாளர் | ஒருங்கிணைந்த கிராமிய, நகர அபிவிருத்தி மற்றும் ஆசிய நாடுகளுக்கான வறுமைத் தனிப்பு பற்றிய கருத்தரங்கு | சீனா | 2015.06.04 - 2015.06.18 |
| 7 | திருமதி. அஜித்தா படகொட | பணிப்பாளர் | ஆசியாவில் வருமான சமமின்மை மற்றும் நிதி | இந்தோநேசியா | 11.11.2015 - 12.11.2015 |
| 8 | திரு.ஏ.ஜி. நிசாந்த | பணிப்பாளர் | உயர்மட்ட நீர் நிலை நிகழ்வு மற்றும் அபிவிருத்திக்கான நிதியளிப்பு | எத்தியோப்பியா | 2015.07.15 |
| 9 | திரு.கே.எம்.றிஸ்வி | உதவிப் பணிப்பாளர் | உயர் முகாமைத்துவத்திற்கான உள்ளக நிகழ்ச் சித்திட்டம். | தாய்லாந்து | 23.11.2015 - 29.11.2015 |

### 5.2.2 உள்நாட்டு பயிற்சி நெறி

2015 ஆம் ஆண்டின்போது பின்வரும் பதவியணி உறுப்பினர்கள் பல்வேறுபட்ட துறைகளில் உள்நாட்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

| | பெயர் | பதவி | பயிற்சி நெறி | நிறுவகம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருமதி.எம்.எம்.ரி.பி.எஸ்.பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | அரசாங்க ஆதனங்கள் மீதான நிகழ்ச்சித்திட்டம் | PRAG நிறுவகம் | 2015.02.12 |
| 2 | திருமதி.எஸ்.டி.எஸ்.பெர்ணார்ந்து | நிர்வாக அலுவலர் | அலுவலக முகாமைத்துவ டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) | 2015-2016 |
| 3 | திருமதி.எம்.எவ்.கே.நிசா | உதவிப் பணிப்பாளர் | பொது முகாமைத்துவ முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | முகாமைத்துவத்திற்கான பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PIM) | 2015-2017 |
| 4 | திரு.எம்.லொக்கு பாலசூரிய<br>செல்வி. ரன்மாலி | முகாமைத்துவ உதவியாளர்<br>வரவு செலவுத்திட்ட உதவியாளர் | கனணி உதிரிப்பாகம் தொடர்பான பயிற்சி | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 2015.08.10-2015.08.11 |
| 5 | திருமதி. எஸ். அபயசிறி<br>திருமதி. எம்.பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | கனணி உதிரிப்பாகம் தொடர்பான பயிற்சி | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 2015.08.25-2015.08.26 |

### 5.3. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிதி நிருவாகம்

2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் சாதாரண செயற்பாடுகளுக்கான வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள் செலவினத் தலைப்பு 240 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு நிகழ்ச்சித் திட்டம் 2 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்டம் — 01 - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்
நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டம் 01 — 01 - வ.செ. திட்ட உருவாக்கல், கொள்கை

(ஆ) நிகழ்ச்சித்திட்டம் — 02 - அபிவிருத்தி செயற்பாடுகள்
நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டம் 02 — 02 - வ.செ. திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள்.

வரவு செலவுத்திட்ட உருவாக்கம் மற்றும் கொள்கைகள் மீதான திணைக்களத்தின் நிருவாகச் செலவினங்களுடன் தொடர்பான ஏற்பாடுகள் கருத்திட்டம் 01 இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற அதேவேளை, கருத்திட்டம் 02 ஆனது, பல்வேறு செலவின முகவராண்மைகளினால் தேவைப்படுத்தப்படும். எதிர்பாராத செலவினங்களுக்கும் 2014 வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகளின் செயற்படுத்துகை மற்றும் குறித்த நிதியாண்டிற்காக முன்னுரிமைக் கொள்கைகளாக அறிவிக்கப்பட்டவை என்பன தொடர்பான செலவினங்களுக்கும் வசதியளிப்பதற்கான ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்கின்றது.

2015 ஆம் ஆண்டின் அடிப்படை மதிப்பீடுகளுக்கு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால்

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்காக ரூபா 216,563628,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த மொத்த ஒதுக்கீடானது பின்வரும் வகையில் பயன்படுத்தப்பட்டது:

| | | | |
|---|---|---|---|
| (1) | நிகழ்ச்சித்திட்டம் 1 இன் கருத்திட்டம் 1 செலவினம் | ரூபா | 6,901,991,025 |
| (2) | நிகழ்ச்சித்திட்டம் 2 இன் கருத்திட்டம் 2 பிற செலவினத் தலைப்பு களுக்கான மாற்றல்கள் ஒதுக்கீடுகள் | ரூபா | 201,296,120,217 |
| | **மொத்தம்** | **ரூபா** | **208,198,111,242** |
| | **நிலுவை ஏற்பாடுகள்** | **ரூபா** | **8,365,516,758** |

### 5.3.1 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

**அட்டவணை 5.4: அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு 2015**

| வகை | அனுமதிக்கப்பட்ட எல்லை 2015 (ரூபா) | உண்மை 2015 (ரூபா) |
|---|---|---|
| செலவின உச்ச எல்லை | 5,500,000.00 | 5,275,649.00 |
| கிடைப்பனவு உச்ச எல்லை | 3,800,000.00 | 4,301,530.00 |
| வரவு நிலுவை உச்ச எல்லைகள் | 27,000,000.00 | 19,874,163.26 |

*மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

2003.12.31 ஆம் திகதி 114 இலக்க, வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்கள செலவினத் தலைப்பிற்கு உட்பட முற்பணக் கணக்கு குறியீடு 240 - 011 இன் கீழ் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை மாத்திரமே மேற்படி அட்டவணையிலுள்ள தரவுகள் உள்ளடங்கியுள்ளன. 118 ஆம் இலக்க, சுற்றறிக்கைக்கு ஏற்ப, பொது அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு நிலுவைகளை செலுத்தி முடிக்கும் நோக்கில் நிறுவனத்திற்கு உள்ளே மற்றும் வெளியே மாற்றப்பட்டிருந்த முற்பணக் கணக்கு குறியீடு 240 – 012 இன் கீழ் செலவினத் தலைப்புகளுடன் மேற்கொண்ட செலவு ரூபா 6,309,464.00 மற்றும் கிடைப்பனவு ரூபா 5,972,857.00 ஆகும். இதன் பிரகாரம், அரச அலுவலர்களின் அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்கு எல்லைகளுடன் திணைக்களம் உடன்பட்டுள்ளது.

**அட்டவணை 5.5: வழங்கப்பட்ட கடன்கள் - 2014**


| கடன்கள்/முற்பணம் | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| விழா முற்பணம் | 82 | 820,000 |
| விசேட முற்பணம் | 58 | 232,400 |
| இடர் மற்றும் சைக்கிள் கடன்கள் | 88 | 4,223,249 |
| **மொத்தம்** | **228** | **5,275,649** |

*மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

### 5.3.2 2015 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு வினாக்கள்

2015 ஆம் ஆண்டின்போது கணக்காய்வாளர் நாயகத்தின் 12 விசாரணைகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அனைத்து விசாரணைகளுக்கும் விடையளிக்கப்பட்டன.

**தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு (அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு அமைவாக)**




ப.நா - பணிப்பாளர் நாயகம்
மே.ப.நா - மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
க - கணக்காளர்
ப - பணிப்பாளர்
பி.ப - பிரதிப் பணிப்பாளர்
நி.அ - நிர்வாக அலுவலர்
உ.ப - உதவிப்பணிப்பாளர்
மு.உ - முகாமைத்துவ உதவியாளர்
மொ - மொழிபெயர்ப்பாளர்
த.தொ - தகவல் தொழில்நுட்பவியலாளர்
வ.செ.உ - வரவு செலவுத்திட்ட உதவியாளர்,அபிவிருத்தி அலுவலர்
அ.உ - அலுவலக உதவியாளர்
சா - சாரதி